ISSN - 2235-9796

20 பக்கங்கள் : விலை 30/-

Valai
# வலை
சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 05 | மே - 2016 | இழை - 56

வாசக நெஞ்சங்களுக்கு...!



செக்கியா 07

வலையின் இதழ் 56 ஆவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக்கிறீர்களா?


மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் புதைத்துக்கொண்டும், தேக்கிக்கொண்டும் உம்மென்று இருப்பதில் பயனில்லை.


2016 மேன் புக்கர் 13

என்றாலும், தீய எண்ணங்களுக்குத் தீனியிட்டு வளர்த்து அதைக் கொழுக்கவிடுபவர்கள், அவற்றைத் தங்களையும் அறியாமல் வெளிப்படுத்த நேரிட்டு ஏராளமான சோதனைக் கட்டங்களுள் சிக்கித்தவிக்கிறார்கள்.

மாறாக, பொங்கி வரும் பொல்லாத உணர்வுகளைப் பெட்டிப் பாம்பென அடக்கி அதன் மேல் அமர்ந்து கொண்டு நல்லுணர்வுகளுக்கு ஆக்கமும், வடிவமும் கொடுப்பவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

ஒருவரிடம் உயிரையே கொடுக்குமளவுக்கு நாம் அன்பு கொண்டிருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அத்தகைய உணர்ச்சியை நாம் என்றேனும் அவருக்கு உணர்த்தியிருக்கிறோமா என்றால், பெரும்பாலும் இல்லை என்றே சொல்லி விடலாம்.



சிகரத்தில் இலங்கை 06

அப்படியானால், நம்முடைய உணர்வுகளுக்கும் அதை வெளியிடுவதற்கும் இடையே எப்போதும் ஓர் இடைவெளி இருந்து கொண்டேயிருக்கிறது என்பது தெரிகிறதல்லவா? இந்த இடைவெளியை நாம் குறைத்தாக வேண்டும். அதாவது நாம் உணர்வதை உணர்ச்சிபூர்வமாகவும், உண்மையாகவும், மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்த வேண்டும்.

வாய் வார்த்தையாலும், எழுத்தாலும், செயலாலும் இந்த இடைவெளியைக் குறைக்க நாம் முயற்சி எடுப்போம்...

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்... நன்றி.

- 'வலை' வீசல் தொடரும்...

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...

✧ மே - 01 - உலக தொழிலாளர் தினம்
✧ மே - 02 - உலக சக்தி தினம்
✧ மே - 03 - உலக ஆஸ்துமா தினம்
✧ மே - 03 - உலக பத்திரிகை சுதந்திர தினம்
✧ மே - 08 - உலக செஞ்சிலுவை தினம்
✧ மே - 08 - உலக நூதனசாலை தினம்
✧ மே - 10 - உலக அன்னையர் தினம்
✧ மே - 11 - உலக தொழில்நுட்ப தினம்
✧ மே - 12 - உலக செவிலியர் / தாதியர் தினம்
✧ மே - 15 - உலக குடும்ப தினம்
✧ மே - 17 - உலக தொடர்பாடல் தினம்
✧ மே - 22 - உலக உயிரின பல்வகைமை தினம்
2016 - தொனிப்பொருள் : "உயிரின பல்வகைமை, மக்கள் மற்றும் அவர்களின் ஜீவாதாரம் ஆகியவற்றின் முக்கியத்துவம்" என்பதாகும்.
✧ மே - 24 - உலக கொமன்வெல்த் தினம்
✧ மே - 25 - உலக தைராய்டு தினம்
✧ மே - 29 - உலக தம்பதியர் தினம்
✧ மே - 31 - உலக புகையிலை மறுப்பு தினம்
2016 - தொனிப்பொருள் : "வெற்று பொதியிடலுக்கு தயாராகுவோம்"




## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❐ இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2016 இல் 5.4 வீதமாகவும், 2017 இல் 5.9 வீதமாகவும் காணப்படும் என எதிர்வு கூறியுள்ள நிறுவனம் எது?
யுனெஸ்கப்
இது ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பொருளாதார சமூக ஆணைக்குழுவாகும்.

❐ வாழ்வின் எழுச்சி சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் பயனாளர்களுக்கு கிடைக்கப்பெறும் நன்மைகள் எவை?

1. குழந்தைப் பேறு நன்மை
2. திருமண நன்மைகள்

3. சிப்தொர புலமைப்பரிசில் செயற்றிட்டம்
4. வைத்தியசாலைக் கட்டண நன்மைகள்
5. மரணக் கொடுப்பனவு

❑ 2016 ஆம் ஆண்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் சர்வதேச புகைத்தல் - மது ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு கொடியொன்று வெளியிடப்பட்டது. அதில் பொறிக்கப்பட்ட வாசகம் என்ன?
"சிகரெட் புகையின் விடுதலையானது சகலருக்கும் வாழ்வதற்கான நேயமிக்க சூழலொன்றாகும்"
இக்கொடி தினம் 2016 மே 31 - யூன் 26 வரை அனுஷ்டிக்கப்பட்டது.

❑ வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் கீழ் சமூக அபிவிருத்தி மன்றத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற நற்பணித் திட்டங்கள் எவை?
1. திரிய பியச தீர்மானங்கள்
2. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான "சிசு திரிய புலமைப்பரிசில்கள்"
3. போதைப் பொருள் தடுப்பு
4. ஆத்மீக அபிவிருத்தியின் ஊடாக குடும்பத்தின் மகிழ்ச்சிகளை விருத்தி செய்தல்
5. கெக்குலு சிறுவர் கழகச் செயற்பாடுகள்
6. துப்புரவேற்பாட்டு வேலைத்திட்டங்கள்
7. திடீர் இயற்கை அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளானோருக்கு நிவாரணங்களை வழங்குதல்
8. மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி வேலைத்திட்டங்கள்

❑ அண்மையில் (04.05.2016) மேஜர் ஜெனரல் தரத்திலான இராணுவ அதிகாரி இயற்கை மரணமெய்தினார். அவர் யார்?
சுமத் மானவடு

❑ 2016 ஆம் ஆண்டு மே மாதம் நடுப்பகுதியில் பெய்த கடும் மழையினால் கிளிநொச்சி பகுதியில் அதன் வரலாற்றில் ஆகக்கூடிய மழை வீழ்ச்சி மில்லி மீற்றரில் எவ்வளவு பதிவாகியது?
380 மில்லி மீற்றர்

❑ இலங்கையில் அண்மையில் பாரிய மண் சரிவு ஏற்பட்டு அழிவுகள் இடம் பெற்ற இடம் எது?
மாவனல்ல அரநாயக்க

வெள்ள, மண்சரிவு அபாயம். 71 பேர் மணம், 173 பேர் மாயம். (இலங்கையைப் புரட்டிப் போட்டதும், சுனாமிக்குப் பின்னராக நடைபெற்ற சோக வரலாறும் ஆகும். 27 வருடங்களின் பின்னரே இப்பேரழிவு இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது)

❒ மண்சரிவுக்கு உள்ளான அரநாயக்க பிரதேசத்தின் சாமசர பகுதி இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர் மண்சரிவுக்கு உட்பட்ட பகுதியாகும் எனக் கூறிய பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல்துறைப் பேராசிரியர் யார்?
பேராசிரியர் கபில தஹநாயக்க

❒ பிரான்ஸ் கடற்படை போர்க்கப்பலொன்று அண்மையில் (30.04.2016) கொழும்பு வந்து சென்றது. அந்தக் கப்பலின் பெயர் என்ன?
ஏகொனிட்

❒ இலங்கையில் அதிகளவான வீதி விபத்துக்கள் இடம்பெறும் மாவட்டமாக எந்த மாவட்டம் இனங்காணப்பட்டுள்ளது?
அம்பாறை
இதில் குறிப்பாக சம்மாந்துறை பொலிஸ் பிரிவிலேயே அதிகளவான வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

❒ இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநராக நியமனம் பெற்றவர்கள் யார்?

1. திருமதி கே. சரவணமுத்து
2. இ.எ.ஹெட்டியாராச்சி
3. ஆர்.ஆர்.ஏ.ஏ. ஜெயலத்
4. கே.எம்.எம். சிரிவர்த்தன
5. எஸ்.ஜே.ஏ.ஹந்தகம

❒ வளர்ப்பு நாய்களைப் பதிவு செய்யத் தவறினால் எவ்வளவு தண்டம் என அரசாங்கம் அறிவித்துள்ளது?
10 ஆயிரம் ரூபா

❒ 2016 ஆம் ஆண்டுக்கான பூகோள சூழலியல் ஆதரவு அமைப்பின் 8 ஆவது சர்வதேச நீரியல் மாநாடு எங்கே நடைபெற்றது?
கொழும்பில் (9-13.05.2016)

- அண்மையில் இலங்கையின் எப்பகுதியில் சங்ககால பெண் புலவர் ஔவையாரின் உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது?
**மட்டக்களப்பு கல்லடிப்பாலம் அருகில்**

- "ரூபராணி ஜோசப்" நினைவு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மலையக எழுத்தாளர் யார்? **திருமதி லரீனா அப்துல் ஹக்**

- அண்மையில் இலங்கைக்கு நல்லெண்ண விஜயத்துடன் வந்து சென்ற ஜப்பானிய போர்க்கப்பல்களின் பெயர் என்ன?
**உரகா, தகஷிமாயாயேயாமா**
அத்துடன், எச்.டி.எம்.எஸ் பட்டனி என்னும் தாய்லாந்து கடற்படைக் கப்பல், எச்.எம்.எஸ். டிபென்டர் என்னும் பிரித்தானியக் கடற்படை போர்க்கப்பல், விக்கிரமாதித்தியா என்னும் இந்திய போர்க்கப்பல் என 5 சர்வதேச போர்க் கப்பல்கள் இவ்வருடம் (2016) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

- காங்கேசன்துறையிலிருந்து வடக்கு நோக்கி 600 கிலோ மீற்றர் தூரத்தில் மையம் கொண்டு தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?
**ரோணு**

- Google Street View நம்பிக்கையை வென்ற நிபுணத்துவம் பெற்ற புகைப்படக் கலைஞர் - Google See in Side இற்காக இலங்கையில் வர்த்தக மையங்களின் பல்வகைப்பட்ட புகைப்படங்களை எடுப்பதற்காக இலங்கை வந்தார். அவரின் பெயர் என்ன?
**பீலிக்ஸ் ஸ்டெக் (ஜேர்மனிய புகைப்படக் கலைஞர்)**

- நாட்டின் முதலாவது பெண் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் வாழ்க்கை தகவல் மற்றும் உரையாடல்களை உள்ளடக்கிய நூல் அண்மையில் கொழும்பில் வெளியிடப்பட்டது. அந்த நூலின் ஆசிரியர் யார்?
**வ.அ. சரத்லால் குமார**

- இலங்கையர்கள் எத்தனை மில்லியன் ரூபாவை சிகரெட்டுக்காகச் செலவு செய்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது? **290 மில்லியன்**

- அண்மையில் (04.05.2016) இலங்கை வந்து சென்ற இலங்கைக்கான வதிவிடமற்ற பிரெஞ்சு பாதுகாப்பு ஆலோசகர் யார்?
**கொமாண்டர் லொயிக் பிசோட்**

❒ இலங்கைக்கு அண்மையில் (18.065.2016) வந்து சென்ற இத்தாலிய அமைச்சர் யார்? **பெனெடேரோ டீலா வெடோவா**

❒ சரியத் தயாராகும் இராட்சதப் பாறையொன்று இலங்கையின் எப்பகுதியில் உள்ளது?
**கொத்மலைப் பிரதேசத்தில் வேவண்டன் தோட்டத்தில்**

## எவரெஸ்ட் உச்சியில் இலங்கைப் பெண் சாதனை

❒ எவரெஸ்ட் மலை உச்சியில் இலங்கையின் கொடியை நாட்டிய முதல் வீராங்கனை யார்?
**ஜெயந்தி குரு உடும்பல**
இந்த மலையானது கடல் மட்டத்திலிருந்து 8 ஆயித்து 848 மீற்றர் உயரமாகும். (29,020 அடி)
இவருக்கு துணையாகப் பயணித்த ஜொஹான் பீரிஸின் ஒட்சிசன் தாங்கியில் வாயு நிறைவடைந்ததையடுத்து அவர் பயணத்தை இடையில் நிறுத்திக்கொண்டு கீழே இறங்கிவிட்டார். அவருக்கும் பாராட்டு தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இலங்கையில் இன்று இவர்கள்...

⌖ இலங்கை பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கத் தலைவராகத் தெரிவு செய் யப்பட்டிருப்பவர் யார்?
**சரத் சந்திர சில்வா (களுத்துறை வித்தியாலய அதிபர்)**

⌖ இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுத் தலைவர் யார்?
**ஹேமசிறி பெர்ணான்டோ**
இவர் பொதுநலவாய விளையாட்டுத்துறைச் சங்கத்தின் ஆசிய பிராந்தியக் குழுவின் தலைவருமாவார்.

⌖ செலான் வங்கியின் புதிய தலைவர் யார்? **ரவி டயஸ்**

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

◈ உலகில் தற்போது எந்த நாட்டுப் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதி நிதித்துவம் அதிகரித்திருப்பதாக ஆய்வு கூறுகின்றது?
**ஈரான் நாட்டின் பாராளுமன்றம்**

◇ நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் சுதந்திரம் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் யார்?
**மொனிகா பீன்டோ**

◇ செக் குடியரசு தற்போது சுருக்கமாக எப் பெயர் கொண்டு அழைக்கப்படு கிறது?
"செக்கியா"
செக்குடியரவை சுருக்கமாக "செக்கியா" என்று அழைப்பதற்கு அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பெயர் அதிகாரபூர்வமாக செக்குடியரவு என்ற பெயருடன் இணையாகவே சேர்க்கப்பட்டுள்ளது.
1993 ஆம் ஆண்டில் செகொஸ்லோவாக்கியா இரு நாடுகளாகப் பிரிந்த போதே செக்குடியரசு சுதந்திரம் பெற்றது. - தலைநகர் : பராக்
ஜனாதிபதி - பிலோஸ் ஸிமான், நாணயம் : செக் கொருனா (CZK)
பிரதமர் - பூஸ்லாவ் சொபோட்கா, மதம் : கத்தோலிக்கம் (R.C)

◇ அப்பிள் நிறுவனம் தனது முத்திரையைப் பயன்படுத்துவதற்கு எந்த நாட்டு நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது?
**டியன்டி**

◇ பணப்பற்றாக்குறையை தவிர்க்க அமெரிக்க டொலருக்கு ஒப்பாக சொந்தமாக டொலர் நாணயத்தை அச்சிடவுள்ள நாடு எது?
**சிம்பாப்வே**

◇ உலகில் எத்தனை தாவர இனங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்?
**390,900**

◇ பாகிஸ்தானுடனான 1971 சுதந்திரப் போராட்டத்தின் போது போர்க்குற்றங்க ளுக்கு உள்ளான பங்களாதேஷின் முன்னணி இஸ்லாமியவாதத் தலைவர் அண்மையில் தூக்கிலிடப்பட்டார். அவர் யார்?
மொதியுர் ரஷ்மான் (வயது-73)

◇ ஒரு நாட்டின் தலைவரது உத்தியோகபூர்வ பதவியேற்பை முன்னிட்டு ஒரு வார காலத்திற்கு திருமணச் சடங்கு மற்றும் மரணச் சடங்குகளை நடத்துவ தற்கு தடை விதித்திருந்த நாடு எது?
வடகொரியா
தலைவர் : கிம் யொங்

◇ 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தொழிலாளர் தினத்தில் 6 இலட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்ற நிகழ்வு எந்த நாட்டில் நடைபெற்றது?
**கியூபா**

◇ கனடாவில் அண்மையில் ஏற்பட்ட காட்டுத் தீ அனர்த்தம் காரணமாக வர லாறு காணாத இடம்பெயர்வினை எப்பகுதி சந்தித்தது?
**கனடாவின் அல்பேர்ட்டா பிராந்தியம். இங்கு 80 ஆயிரம் பொது மக்கள் இடம்பெயர்ந்தனர்.**

◇ முஸ்லிம் பெண்களுக்கான முதலாவது உடற்பயிற்சிக்கூடம் எந்த நாட்டில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது?
**பிரித்தானியாவில்**

◇ இஸ்ரேல் வரை சென்று தாக்கும் வல்லமையுடைய ஏவுகணைப் பரிசோத னையை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்த நாடு எது?
**ஈரான்**

◇ அண்மையில் நடைபெற்ற பிலிப்பைன்ஸின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கடும் போக்காளர் யார்?
**ரொட்றிக்கோ டிகோஸ்**

◇ மஞ்சள் காய்ச்சல் எந்த நாட்டைத் தாக்கி வருவதாக அண்மையில் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது?
**அங்கோலா**
நுளம்புகளால் பரவும் மேற்படி காய்ச்சல் காரணமாக அங்கோலாவில் கடந்த வருடம் (2015) டிசம்பர் மாதம் 277 பேர் பலியாகியுள்ளதாக அந்த ஸ்தாபனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

◇ பிலிப்பைன்ஸின் முதலாவது பால் மாற்று சிகிச்சை செய்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் யார்?
**ஜெரால்டின் ரோமன் (வயது-49)**

◇ உலகின் மிகவும் வயதானவர் என்ற பெருமையைப் பெறும் நபர் யார்?
**எம்மா மொரானோ (வயது-116) (இத்தாலி)**
உலகின் வயதான நபராக இதுவரை காலமும் விளங்கிய அமெரிக்காவைச் சேர்ந்த 116 வயதான அஸன்னாஹ் முஷட் ஜோன்ஸ் என்பவர் கடந்த 12.06.2016 ஆம் திகதி மரணமாகியதை அடுத்து அவரது இடத்தை இவர் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

◇ அண்மையில் (19.06.2016) 66 பேருடன் பயணித்த எம்.எஸ்.804 என்ற விமானம் மத்திய தரைக்கடலில் விழுந்தது. அந்த விமானம் எந்த நாட்டுக்குச் சொந்தமானது?
**எகிப்து**
இதேவேளை 2015 ஒக்ரோபரில் 224 பேருடன் பயணித்த ரஷ்யாவுக்குச் சொந்தமான விமானமொன்று எகிப்திய சீனாய் தீபகற்பத்திற்கு மேலாக வெடித்துச் சிதறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

◇ உலகளாவிய ரீதியில் எத்தனை மில்லியன் பேர் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்படுவதாக ஆய்வு கூறுகிறது?
**235 மில்லியன்**

◇ குப்பை மேடுகளுக்கு அருகில் வாழ்பவர்களுக்கு என்ன நோய் வருவதற்கான அபாயம் உள்ளதாக இத்தாலி வெளியிட்டுள்ள புதிய ஆய்வு கூறுகிறது?
**நுரையீரல் புற்றுநோய்**

◇ உலகில் எங்கு அண்மையில் (27.05.2016) பாரிய தொழிற்சங்கப் போராட்டம் எந்த நாட்டில் நடைபெற்றது?
**பிரான்ஸ்**

◇ சர்வதேச றோட்டறிக் கழகத்தின் 107 ஆவது வருடாந்த மாநாடு எங்கே (29.05.2016) நடைபெற்றது? அதன் தலைவர் யார்? இலங்கை சார்பாகப் பங்குபற்றிய முக்கியஸ்தர் யார்?
**தென்கொரியாவின் சியோல் நகரில்**
**கே.ஆர்.ரவீந்திரன்**
**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க**

◇ உலக சனத்தொகையில் எத்தனை பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது?
**5 கோடி பேர்**

◇ போர்க்குற்றச்சட்டு நிரூபிக்கப்பட்டதன் மூலம் தூக்கிலிடப்பட்ட ஜமாத் கட்சித் தலைவரின் பெயர் என்ன?
**மொதியூர் ரஹ்மான் நிசாமிக்**

◇ இளைஞர்களுக்கான சிறந்த நாடுகள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ள நாடு எது? **கனடா**

முறையே ஜேர்மனி, பிரிட்டன், ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் இடம்பிடித்துள்ளன.
இதேவேளை, இந்தியா 23 ஆவது இடத்திலும், இலங்கை 43 ஆவது இடத்திலும் உள்ளன.

◇ அண்மையில் சிகா வைரஸ் தொற்றுக்கள் கண்டறியப்பட்ட நாடு எது?
**சிங்கப்பூர்**

◇ உலகிலேயே மிகப் பிரமாண்டமான சொகுசுக் கப்பல் தனது பயணத்தை அண்மையில் ஆரம்பித்துள்ளது. அந்தக் கப்பலின் பெயர் என்ன?
**ஹாமணி ஒப் த சீஸ் (Harmony of the Seas)**
**2 ஆயிரத்து 100 பணியாளர்கள்**
**6 ஆயிரத்து 780 பயணிகள்**

◇ உலகின் மிகவும் வயதான யானை ஒன்று எந்த நாட்டில் (26.06.2016) சாவடைந்தது?
**ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் (இனோகஷிரா உயிரியல் பூங்கா)**
இதன் பெயர் : ஹனகோ (வயது-67)

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ கிரிக்கெட் விதிகளை உருவாக்கும் பொறுப்பை வகிக்கும் மரில்லி போன் கிரிக்கெட் கழகத்தின் (எம்.சி.சி.) புதிய தலைவர் யார்?
**மத்தியூ பிளெமிங் (வயது - 51) (இங்கிலாந்து)**

◎ தாய்வானின் புதிய பெண் ஜனாதிபதி யார்? **சாய் இங்-வென்**

◎ ஆப்கானிஸ்தானிய தலிபான் தீவிரவாதிகளின் புதிய தலைவர் யார்?
**ஹைபதுல்லாஹ் - தலைநகரம் : காபூல்**

◎ ஆஸ்திரியாவின் புதிய ஜனாதிபதி யார்?
**அலெக்ஸ்சாண்டர் வான் டெர் பலன் - தலைநகரம் : வியன்னா**

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ பிரபல ரென்னிஸ் வீராங்கனை ஒருவரின் சுயசரிதம் அடங்கிய புத்தகம் எதிர்வரும் யூலை மாதம் வெளியிடப்படவுள்ளது. அந்த வீராங்கனை யார்?
**சானியா மிர்ஷா**

⊙ 2015/2016 பருவ காலத்திற்கான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ள அணி எது?
**அவுஸ்ரேலிய அணி (118 புள்ளி)**
இரண்டாவது இடம் - இந்தியா (112 புள்ளி)
மூன்றாவது இடம் - பாகிஸ்தான் (111 புள்ளி)
நான்காவது இடம் - இங்கிலாந்து (105 புள்ளி)
ஐந்தாவது இடம் - நியூஸிலாந்து (98 புள்ளி)
இதேவேளை இலங்கைக்கு 7 ஆவது இடம் (88 புள்ளி) கிடைத்துள்ளது.

⊙ அண்மையில் நடைபெற்ற கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் மெதுவாக பந்து வீசியதற்காக பெங்களூர் அணித் தலைவர் கோஹ்லிக்கு எத்தனை இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது?
**24 இலட்சம்**

⊙ தனது அணிக்காக விளையாடிக் கொண்டிருந்த போது சுருண்டு விழுந்து மரணித்த கால்பந்தாட்ட வீரர் யார்? **பெற்றிக் எகெங் (கெமரூன்)**

⊙ 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் தலைசிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான விருதைப் பெற்றுக்கொண்ட வீரர் யார்? **ஸர்வான் ஜோஹர்**

⊙ மாஸ்டர்ஸ் போட்டியில் அதிக சம்பியன் பட்டம் பெற்றவர் என்ற சாதனையைப் படைத்துள்ள வீரர் யார்? **நோவக் ஜோகோவிச் (செர்பியா)**

⊙ கேமரூன் கால்பந்து வீராங்கனை ஒருவர் பயிற்சியின்போது மாரடைப்பால் காலமானார். அந்த வீராங்கனை யார்?
**ஜீனி கிறிஸ்டெல்லி** (வயது-26)

⊙ இத்தாலி லீக் (சீரிஏ) கால்பந்துப் போட்டியில் ஒரு தொடரில் அதிக கோலடித்தவரான குன்னார் நோர்தலின் 66 ஆண்டு கால சாதனையை முறியடித்த வீரர் யார்?
**கொன்ஸாலோ ஹிகுவெய்ன் (நபோலி)**

⊙ தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்ற 17 ஆவது கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.34 மீற்றர் உயரம் தாவி புதிய தேசிய சாதனையை நிலைநாட்டிய வீராங்கனை யார்?
**ஹர்ஷனி** (வயது-19)

⊙ செஸ்டர் - லீ - ஸ்டிரிட்டில் கடந்த 27.05.2016 இல் நடைபெற்ற இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், ஒரு விக்கெட்டோடு டெஸ்ட் கிரிக்கெட்டில் 300 விக்கெட்டுக்களை வீழ்த்திய இலங்கை அணியின் மூன்றாவது வீரர் யார்?

**ரங்கன ஹேரத்**

## அயல்நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

✧ கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த இந்தியாவின் தங்கச்சட்டை மனிதர் யார்?

**பங்கஜ் பராக் (வயது-47)**

மகாராஷ்டிராவின் புகழ்பெற்ற தொழில் அதிபர். இவர் அணிந்துள்ள தங்கச் சட்டையின் பெறுமதி **98,35,099** ரூபா ஆகும்.

✧ தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு வேட்பாளர்களாகப் போட்டியிட்டவர்கள் யார்?

1. **கலைஞர் கருணாநிதி (தி.மு.க. வயது - 93)**
2. **ஜெயலலிதா (அ.தி.மு.க. வயது - 68)**
3. **ஜோசப் ஸ்டாலின் (தி.மு.க. வயது - 63)**
4. **விஜயகாந் (தே.மு.தி.க. (வயது-63)**

✧ கடந்த இரண்டு ஆண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு எத்தனை தடவைகள் பயணங்களை மேற்கொண்டார்

**4 தடவைகள்**

✧ இந்தியாவின் சட்ட மன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு தோற்றதே இல்லை என்ற சாதனையைத் தக்க வைத்த இந்தியாவின் முதுபெரும் அரசியல்வாதி யார்?

**கருணாநிதி**

இவர் 13 ஆவது முறையாகவும் வெற்றி பெற்றுள்ளார். அத்துடன் 5 முறை முதல்வராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

✧ இந்தியாவின் பழம்பெரும் நடிகையர் திலகம் எனப் போற்றப்படும் நடிகை ஒருவரின் வரலாறு திரைப்படமாக எடுக்கப்படவுள்ளது.

அந்த நடிகை யார்?

**சாவித்திரி**

✧ அணு ஆயுத வல்லமை கொண்ட பாகிஸ்தானால் 5 நிமிடங்களில் டில்லியை அழிக்க முடியுமென கருத்து வெளியிட்டுள்ள அந்நாட்டின் அணு ஆயுதத் திட்டத்தின் தந்தை எனப்படும் அணு விஞ்ஞானி யார்?
**அப்துல் காதீர் கான்**

---

## ❐ மீண்டும் முதல்வர் ஜெயலலிதா

- வரலாறு படைத்து 6 ஆவது தடவையாகவும் தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஜெயலலிதா வெற்றி பெற்றுள்ளார்.
- 1989 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற 7 பொதுத் தேர்தல்களில் இவர் 6 தடவைகள் வெற்றி பெற்றுள்ளார்.
- அ.தி.மு.க. - 134 தொகுதி
- தி.மு.க. - 98 தொகுதி
- காங்கிரஸ் - 08 தொகுதி

ஜெயலலிதாவின் இயற்பெயர் : கோமளவள்ளி ஜெயராம்
'ஏபிஸில்' என்ற ஆங்கிலத் திரைப்படத்தின் மூலம் திரையுலகிற்கு அறிமுகமானார்.
இத்தேர்தலில் எம்.ஜி.ஆரின் சாதனையை ஜெயலலிதா முறியடித்துள்ளார். 232 தொகுதிகளில் 40.80 சதவீத வாக்குகளையும் 134 இடங்களையும் அ.தி.மு.க. கைப்பற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## விருதுகள் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

✧ 2016 ஆம் ஆண்டுக்கான மேன் புக்கர் விருதினைப் பெற்றுக்கொண்ட எழுத்தாளர் யார்?
**ஹான் காங்** (வயது-45) (தென்கொரியா)
மிருக வதைக்கு எதிரான "த வெஜிட்டேறியன்" என்ற நாவலுக்காகவே கிடைக்கப்பெற்றது. லண்டனில் இந்நிகழ்வு இடம்பெற்றது.
தனது மொழிபெயர்ப்பாளரான டெபோரா ஸ்மித்துடன் இணைந்து 72,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பரிசினைப் பெற்றுக்கொண்டார்.

## அழகுராணிகள் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ 2016 ஆம் ஆண்டுக்கான பிஜி உலக அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்ட அழகுராணி யார்?
**பூஜா** பிரியங்கா (வயது - 24) அவுஸ்ரேலியா

# நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

- இலங்கை அரசினால் அனர்த்தம் இடம்பெறும் மாவட்டங்களாக அறிவிக்கப் பட்டுள்ள மாவட்டங்கள் எவை?
  **கண்டி, கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி, நுவரெலியா**

- தேசிய தொலைத்தொடர்பாடல் அருங்காட்சியகம் (17.05.2016) அண்மையில் எங்கு திறந்து வைக்கப்பட்டது?
  **பாதுக்கை**
  **(இது ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மிற்குச் சொந்தமான செய்மதி புவி நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது)**

- சீனாவிடமிருந்து தாய்வான் எத்தனையாம் ஆண்டு பிரிந்து சென்றது?
  ***1949***

- கடந்த நூற்றாண்டின் சிறந்த கால்பந்தாட்ட வீரர் என, பீபா அறிவித்த வீரர் யார்? **பீலே**

- மினி உலகக் கிண்ணம் என அழைக்கப்பட்டுவரும் ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டி எத்தனையாம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது?
  ***1998***

- 2016 மே மாத ஜனாதிபதி விளையாட்டு விருது வழங்கும் விழாவில் வழங் கப்பட்ட விருதுகள் எவை?
  **1. கிரீடா அபிமானி 2. கிரீடா கீர்த்தி, 3. கிரீடா லங்காதீப,**
  **4. கரீடா பூசன 5. கிரீடா பிரபா**

- இலங்கை வங்கி தனது எத்தனை வருட கால சேவையை நிறைவு செய்துள்ளது?
  **76 வருடங்கள்**

- தேசிய புத்தாக்குனர் ஆணைக்குழு எந்த அமைச்சின் கீழ் செயற்படுகின்றது?
  **விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**

- அறிவுசார் சொத்துரிமை என்பது யாது?
  **ஒருவன் தன் மூளையைப் பயன்படுத்தி உருவாக்கும் புதிய புதுமையான சமுதாயத்திற்கு பயன்படுகின்ற ஒன்றை உருவாக்குவதற்கான படைப்பாற்றல் என்பதாகும்.**

# நுண்ணறிவு – IQ

01 தொடக்கம் 05 வரையான வினாக்கள் கிழே தரப்பட்ட நெய்யரி தொடர்பானது. நெய்யரியின் கிடையாகவும், நிலைக்குத்தாகவும் கூட்டும்போது பெறுமதி சமனாகவே இருப்பின், A - D வரையான ஆங்கில எழுத்துக்களுக்கு சரியான இலக்கங்களைக் கண்டுபிடிக்க. (மொத்த நிரலினதும், நிரையினதும் கூட்டுத்தொகை 1200 ஆகும்)

| | | | |
|---|---|---|---|
| 28 | 42 | 44 | A |
| 42 | 55 | B | 15 |
| 35 | C | 22 | 65 |
| D | 25 | 46 | 34 |

01. நெய்யரியின் ஒரு நிரலினது அல்லது ஒரு நிரையினது கூட்டுத் தொகை யாது?
1) 170 2) 200 3) 150 4) 175

02. ஆங்கில எழுத்து A இற்கு பொருத்தமான எண் யாது?
1) 36 2) 34 3) 25 4) 42

03. ஆங்கில எழுத்து B இற்கு பொருத்தமான எண் யாது?
1) 36 2) 38 3) 45 4) 35

04. ஆங்கில எழுத்து C இற்கு பொருத்தமான எண் யாது?
1) 30 2) 38 3) 28 4) 25

05. ஆங்கில எழுத்து D இற்கு பொருத்தமான எண் யாது?
1) 40 2) 39 3) 42 4) 45

06 - 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிக

06. வெளிநாடுகளுக்கு பார்சல் சேவையை மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்று முதல் 5 கிலோவிற்கு 3750 ரூபா அறவிடுகின்றது. மேலதிக ஒவ்வொரு கிலோவிற்கும் 950 ரூபா வீதமும் அறவிடுகின்றது. அந் நிறுவனத்தினூடாக அனுப்பப்பட்ட பார்சல் ஒன்றுக்கு 9877.50 அறவிடப்பட்டதாயின் அனுப்பப்பட்ட பார்சலின் நிறை யாது?
1) 11.45 Kg 2) 11.5 Kg 3) 10.45 Kg 4) 10.5 Kg

07. 3 வருடங்களுக்கு முன்பு கணவன், மனைவி மற்றும் அவர்களது குழந்தையின் வயதுகளின் சராசரி 27 வருடமாக இருந்தது. 5 வருடங்களின் முன் குழந்தை மற்றும் மனைவி ஆகியோரின் வயதுகளின் சராசரி 20 வருடங்கள் எனின், கணவனின் தற்போதைய வயது யாது?
1) 40 வருடம் 2) 35 வருடம் 3) 48 வருடம் 4) 50 வருடம்

08. பாபு சங்கரிலும் பார்க்க மூன்று மடங்கு விரைவாக ஓடுவான். சங்கர் பாபுவிலும் பார்க்க 100 மீற்றர் முன்னால் ஓட ஆரம்பிக்கின்றான். பாபு சங்கரைக் கடக்கும் நேரத்தில் சங்கர் ஓடியுள்ள தூரம் யாது?
1) 25 மீற்றர் 2) 50 மீற்றர் 3) 75 மீற்றர் 4) 100 மீற்றர்

09. 60 $kmh^{-1}$ கதியில் செல்லும் புகையிரதம் ஒன்று மிதிவண்டியில் 6 $kmh^{-1}$ கதியில் அதேதிசையில் செல்லும் ஒரு மனிதரை 10 செக்கனில் கடந்து செல்கிறது. இப் புகையிரதத்தின் நீளம் யாது?
1) 100 M 2) 120 M 3) 110 M 4) 150 M

10. கம்பனி ஒன்றின் யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தேர்தலொன்றில் இருவர் போட்டியிட்டனர். இதன் போது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 600. இதில் 8 வீதமான வாக்குகள் செல்லுபடியற்றதாகக் கருதப்பட்டது. வெற்றிபெற்றவர் 75 வீதமான வாக்குகளைப் பெற்றிருப்பின் வெற்றிபெற்றவரும், தோல்வியுற்றவரும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை முறையே
1) 330 - 110 2) 414 - 138 3) 441 - 147 4) 420 - 140

11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

- ☐ குமரனின் வயது சங்கரனின் வயதின் இரு மடங்காகும்.
- ☐ பரதனின் வயது சங்கரனின் வயதின் அரைவாசியாகும்.
- ☐ சந்தானத்தினதும், சுந்தரத்தினதும் வயதுகள் சமம்.
- ☐ நடேசனின் வயது சங்கரனினதும் குமரனினதும் வயதுகளின் கூட்டுத்தொகைக்குச் சமம்
- ☐ நாதனின் வயது நடேசனினதும் சுந்தரத்தினதும் குமரனினதும் வயதுகளின் கூட்டுத்தொகைக்குச் சமன்.
- ☐ சந்தானத்தின் வயது நடேசனினதும், குமரனினதும் வயதுகளின் கூட்டுத்தொகைக்குச் சமன்.

11. இவர்களில் இளையவர் யார்?

1) நடேசன் 2) சுந்தரம் 3) பரதன் 4) நாதன்

12. இவர்களில் மூத்தவர் யார்?
1) நடேசன் 2) சுந்தரம் 3) பரதன் 4) நாதன்

13. சந்தானத்தின் வயது யாது?
1) குமரனின் வயதின் இருமடங்கு
2) நடேசனின் வயதின் இருமடங்கு
3) சங்கரனின் வயதின் ஆறுமடங்கு
4) நாதனின் வயதின் அரைவாசி

14. எம் மூவரின் வயதுகளின் கூட்டுத்தொகை நாதனின் வயதுக்குச் சமன்?
1) குமரன் - சங்கரன் - பரதன்
2) சந்தானம் - நடேசன் - சுந்தரம்
3) சந்தானம் - சங்கரன் - பரதன்
4) குமரன் - நடேசன் - சந்தானம்

15. எவ்விருவரின் வயதுகளின் கூட்டுத்தொகையின் இரு மடங்கானது நடேசனின் வயதுக்குச் சமம்?
1) சங்கரன் - பரதன்
2) சந்தானம் - சுந்தரம்
3) சந்தானம் - சங்கரன்
4) குமரன் - நடேசன்

16 தொடக்கம் 20 வரையான வினாக்களில் தரப்பட்ட எண் தொடரை நன்கு அவதானித்து இடைவெளியை நிரப்புக.

16. 2, 5, 17, 65, 257, --------


17. 82, 97, 114, 133, --------

18. 0.25, 0.5, 1, 2, --------

19. A, C, E, G, I, ---------

20. 2/3, 1 1/3, 2, 2 2/3, 3 1/3, -------, ---------

21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு பின்வரும் வரிப்படத்தினை அடிப்படையாகக்கொண்டு விடையளிக்க.




இங்கு நிறங்கள் பின்வருமாறு சேர்கப்படலாமெனக் கருதுக.

- ☐ மஞ்சள் + வெள்ளை + சிவப்பு + நீலம் = கபிலம்
- ☐ சிவப்பு + நீலம் = செவ்வூதா
- ☐ மஞ்சள் + வெள்ளை + சிவப்பு = இளஞ்செம்மஞ்சள்
- ☐ வெள்ளை + நீலம் = இளநீலம்
- ☐ வெள்ளை + சிவப்பு + நீலம் = இளஞ்செவ்வூதா
- ☐ வெள்ளை + மஞ்சள் = இளம்மஞ்சள்
- ☐ மஞ்சள் + வெள்ளை + நீலம் = இளம்பச்சை

21. கபிலத்தைக் குறிக்கும் எழுத்து யாது?
 1) I 2) G 3) C 4) A

22. செவ்வூதாவைக் குறிக்கும் எழுத்து யாது?
 1) B 2) F 3) I 4) K

23. இளம்செம்மஞ்சளைக் குறிக்கும் எழுத்து யாது?
 1) L 2) G 3) I 4) C

24. இளம்மஞ்சளைக் குறிக்கும் எழுத்து யாது?
 1) M 2) L 3) I 4) G


25. இளம்பச்சையைக் குறிக்கும் எழுத்து யாது?
 1) C 2) B 3) L 4) M

---

**உங்கள் பார்வையில் வலை...**

வலை குறித்து உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.

*26 தொடக்கம் 30 வரையான வினாக்கள் பின்வரும் எண்சில்லை அடிப்படையாகக் கொண்டவை.*




இச் சில்லின் எண்கோலத்தை கண்டறிந்து P, Q, R, S, T ஆகிய ஆங்கில எழுத்துகளிற்கு வரவேண்டிய எண்களைக் கண்டுபிடிக்க.

26. P ----- 27. Q ----- 28. R ----- 29. S ----- 30. T ------

## நுண்ணறிவுக்கான விடைகள்

01. 150
02. 36
03. 38
04. 28
05. 45
06. 11.45kg
07. 40 வருடம்
08. 50 மீற்றர்
09. 150m
10. 414 - 138
11. பரதன்
12. நாதன்
13. நாதனின் வயதின் அரைவாசி
14. குமரன் - நடேசன் - சந்தானம்
15. சங்கரன் - பரதன்
16. 1025
17. 154
18. 4
19. K
20. 4, 4 2/3
21. I
22. B
23. G
24. M
25. L
26. 9
27. 12
28. 10
29. 25
30. 121



விரைவில் நடைபெறவுள்ள கிராம அலுவலர் போட்டிப் பரீட்சை, வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமுர்த்தி) போட்டிப் பரீட்சை போன்றவற்றை முன்னிட்டு வீசப்பட்ட வலையின் விசேட வெளியீடு வெளிவந்து விற்பனையாகிறது...



விலை : 300/- மட்டுமே

வாங்கிப் படியுங்கள்.
வித்தியாசத்தை உணர்வீர்கள்...

விலை : 350/- மட்டுமே

யாழ்.நகரில் பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ள முடியும்


## ❒ G–7 பொருளாதார உச்சி மாநாடு :

- 42 ஆவது உச்சி மாநாடு (26,27.05.2016) ஜப்பான் இஸிஷிமா பிரதேசத்தில் நடைபெற்றது.
- இந்த அமைப்பில் - கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா உள்ளன.
- இந்த மாநாட்டில்,
  தீவிரவாதம், இணையப் பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு, ஐரோப்பா எதிர்கொண்டுள்ள அகதிகள் பிரச்சினை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.
- வரலாற்றில் முதன் முறையாக மேற்படி மாநாட்டிற்கு இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- 1975 ஆம் ஆண்டு மத்திய கிழக்கில் எண்ணெய் தொடர்பான நெருக்கடி நிலையை ஆராய்ந்து தீர்வு காண்பதற்காக இந்த அமைப்பு தொடங்கப் பட்டது.
- G-8 ஆக இருந்த இந்த அமைப்பிலிருந்து ஒரு நாடு விலக்கப்பட்டது. அந்த நாடு ரஷ்யா ஆகும்.
  இது உக்ரேனின் இறைமையைத் தொடர்ந்து மீறி வந்தமையால் இந்த அமைப்பிலிருந்து நீக்கப்பட்டது.

---



## கணணிக்கு நிகரான தேடல் மையம் "வலை"

காலத்தின் தேவை அறிந்து வெளிவரும் "வலை" பொது அறிவுப் பொக்கிசமானது கணணிக்கு நிகரான தேடல் மையமாக காணப்படுகின்றது. மாதா மாதம் நடைபெறும் விடயங்களை ஒவ்வொரு தொகுப்பாக வெளியிடுவதனால் பயனாளிகளின் தேடல் இன்னும் சுலபமாகின்றது. மிக விரைவில் இலங்கை முழுவதும் உள்ள தமிழர்களின் பொது அறிவு சார்ந்த தேவையை "வலை" நிச்சயம் நிறைவேற்றும் என நம்புகின்றேன்."

சோதனைகளைத் தாண்டி உங்கள் சாதனைப் பயணம் தொடரட்டும்.

த. சுபேசன்,
ஊடகவியளாளர்,
சாவகச்சேரி.

வாழ்க வையகம் - வாழ்க வளமுடன்

தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com